2. அறிவிப்புகள்.

(1) சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சென்னைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவும், நியமனத் தாள்கள் 9—3—1984 அன்று நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அன்று நண்பகல் 12 மணி வரை மேற்கண்ட இரண்டு பேரவைக் குழுக்களுக்கும் எந்த ஒரு நியமனத் தாளும் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வில்லை. எனவே இத் தேர்தல்கள் மீண்டும் நடத்தப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் உறுப்பினராக இருந்த காலத்தில் பயணப்படி மற்றும் தினப்படி ஆகிய விவரங்கள் குடந்தை கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளருக்கு அளித்தல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : குடந்தை கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் 1961 ஆம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தின், பிரிவு 71-ன் கீழ் நிலுவையிலுள்ள மேல்வரி விசாரணை தொடர்பாக, சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் உறுப்பினராக இருந்த காலத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட குறிப்பிட்ட சில நாட்களுக்கான பயணப்படி மற்றும் தினப்படி ஆகிய விவரங்கள் தனக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். மேற்படி விவரங்கள் அடங்கிய பயணப்படி பதிவேட்டின் பகுதி உண்மை நகல் ஒன்று குடந்தை கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் அவர்களுக்கு அனுப்ப அவை ஒப்புதலளிக்கிறது என்று கருதுகிறேன்.